(இ) ஆம் எனில், இது குறித்து அரசின் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, தற்போது நடைபெற்று வரும் பரப்பலாறு திட்டத்தில் நங்கனியாற்றில் 6–7 சிறிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றன. பள்ளிப்பட்டி வாய்க்கால் உடைந்து விட்டது. இத் திட்டத்தில் அது சேர்க்கப்படவில்லை. பள்ளிப்பட்டியில் அணை கட்ட வேண்டுமென்று அத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் விடுத்திருக்கிறாரா ? அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அது போன்று ஒரு வேண்டுகோளை விடுத்து இருக்கிறார்கள். அது தலைமைப் பொறியாளரின் பரிசிலனையில் இருக்கிறது. அவர் அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

செங்கற்பட்டுக்கருகே மேம்பாலம்

* 204 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு அருகே சென்னை—செங்கற்பட்டு சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, செங்கற்பட்டுக்கு அருகே சென்னை—செங்கற்பட்டு சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அரசு அறிவிக்குமா ? இதைப்போலவே தமிழ்நாட்டில் ரயில் பாதை கடக்கும் இடங்களில் மேம்பாலம் கட்டுவதற்கு தமிழக அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டம் இப்போது மறு பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. மேம்பாலத் திற்குப் பதிலாக சப்–வே போடலாம் என்று இப்போது சொல்லப் படுகிறது. சப்–வேக்கு 27 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே போட்ட ஓவர்பிரிட்ஜ் கட்ட வேண்டுமானல் பல கட்டங் களில் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவு அதிகமாகிறது. அதைக் கணக்கில் கொண்டு தலைமைப் பொறியாளர் தற்போது ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்.

In view of this the Chief Engineer has now suggested a sub-way instead of an overbridge taking into account the following advantages :—

(i) It avoids costly acquisition of lands.

(ii) It passes through low lying areas and therefore is ideally suited for sub-way.

(iii) It requires no division during construction stage as the existing road is not affected by the construction of sub-way.

நவ்லாக் அரசாங்க விதைப்பண்ணை

* 159 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை அருகே உள்ள நவ்லாக் அரசாங்க விதைப்பண்ணைக்கு மேலும் நில ஆர்ஜிதம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ? எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சுமார் 524.16 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு இயங்கா உடமைகளைக் கேட்டுப் பெறுதல்—கையகப்படுத்தல் சட்டத்தின்கீழ் கைப்பற்றும்படி ஆணையிடப்பட்டுள்ளது (Tamil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956.) நில அளவை வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேற்படி வேலைகள் முடிவுற்றபின் நிலச் சொந்தக்காரர்களுக்கு நிலத்தைக் கைப்பற்றுதல் பற்றி அறிவிப்புகள் அலுவலர்களால் அனுப்பப்படும்.